சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.No. 573 / 2018

பெயர்: சரோஜா ம.சா.1 08.09.2023

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. அதனால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்துசமயத்தில் இருச்சக்கர வாகனத்தில் 3 பேர் சென்றார்கள் என்றால் இல்லை 2 நபர்கள் சென்றதாக சொன்னார்கள். முதல் தகவல் அறிக்கையில் 3 நபர்கள் இருச்சக்கர வாகனத்தில் பயணம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இருச்சக்கர வாகனத்தை ஓட்டிச்சென்ற மணிவண்ணன் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இருச்சக்கர வாகனத்தில் சென்ற 3 பேரும் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. முதல்தகவல் அறிக்கையில் அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக விபத்து சமயத்தில் அங்கு வந்த அரசுப் பேருந்தை தவறாக வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. அரசுப் பேருந்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் அரசுப்பேருந்தில் எவ்வித சேதமும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இறந்துபோன எனனது மகன் ஹரி ஏஜென்சியில் பகுதி நேரமாக வேலைப்பார்த்து மாதம் ரூ.25,000 க்கு மேல் சம்பாதித்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகன் வருமான வரி செலுத்தி வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சம்பாதித்திருந்தால் வருமானவரி செலுத்தியிருக்க வேண்டும் என்றால் சரியல்ல. எனது மகனின் வருமானத்தை நம்பி இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிர்மனுதாரருக்கும் சம்பந்தமில்லை என்பதால்இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

ஒம் / சரோஜா

ஒம்/ சண்முக கனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.